بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் அல்லாஹ்வுக்காக மட்டுமே கொள்ள வேண்டிய சகோதரத்துவம் மற்றும் அன்புக்கு ஓர் உதாரணம் தர வேண்டும் என்றால் ஹஸ்ரத் மவ்லானா ஹக்கீம் நூருத்தீன் (ரலி) அவர்களைத் தான் கூற வேண்டும். கட்டுப்படுவதாக உறுதிமொழி எடுத்த பிறகு அதற்கு ஓர் தகுதி வாய்ந்த ஒரு முன்மாதிரி காட்டி அதன் மீது உறுதியாக நிலை நிற்பதற்கு ஓர் உதாரணம் தருவதாயின் அது ஹஸ்ரத் மவ்லானா நூருத்தீன் சாஹிப் அவர்கள் தான். எல்லா உலகியல் தொடர்புகளை விட அதிகமாக பைஅத்தின் உரிமையை வழங்கியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் தொடர்பை இணைத்ததற்கு உயரிய முன்னுதாரணம் ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களேயாவார்கள்.

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்*

*(அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)*

*அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 13.11.2015 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது இருந்த மாசற்ற பற்று குறித்து சிறிதேனும் படித்த, கேட்ட அஹ்மதிகள் அறிவர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் அல்லாஹ்வுக்காக மட்டுமே கொள்ள வேண்டிய சகோதரத்துவம் மற்றும் அன்புக்கு ஓர் உதாரணம் தர வேண்டும் என்றால் ஹஸ்ரத் மவ்லானா ஹக்கீம் நூருத்தீன் (ரலி) அவர்களைத் தான் கூற வேண்டும். கட்டுப்படுவதாக உறுதிமொழி எடுத்த பிறகு அதற்கு ஓர் தகுதி வாய்ந்த ஒரு முன்மாதிரி காட்டி அதன் மீது உறுதியாக நிலை நிற்பதற்கு ஓர் உதாரணம் தருவதாயின் அது ஹஸ்ரத் மவ்லானா நூருத்தீன் சாஹிப் அவர்கள் தான்.

எல்லா உலகியல் தொடர்புகளை விட அதிகமாக பைஅத்தின் உரிமையை வழங்கியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் தொடர்பை இணைத்ததற்கு உயரிய முன்னுதாரணம் ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களேயாவார்கள். கட்டுப்படுதலின் உயரிய முன்மாதிரியை ஒருவர் நிலைநாட்டினார் என்றால் அது ஹகீமுல் உம்மத் மவ்லானா நூருத்தீன் (ரலி) அவர்களேயாவார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு முன்னால் எளிமையும் பணிவும் காட்டவதில் ஒருவர் ஓர் உயரிய முன்மாதிரியை காட்டினார்கள் என்றால் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாற்றிலேயே ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸிஹ் தான் அதற்கான உயரிய தகுதியை நிலைநாட்டினார்கள். பிறகு காலத்தின் இமாமாகிய ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் அன்னார் பெற்றிருந்த மதிப்பை வேறொருவரும் பெற்றிருந்ததில்லை.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் கூறினார்கள்: ஒவ்வொருவரும் நூருத்தீனாக ஆகிவிட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும். இது ஒரு பெரிய கவுரவமாகும். ஏனெனில் காலத்தின் இமாம் தம்மை ஒப்புக் கொண்டவர்களுக்காக தகுதியின் அளவுகோளாக ஹஸ்ரத் மவ்லானா நூருத்தீனை ஆக்கினார்கள். ஒவ்வொருவரும் நூருத்தீன் ஆகிவிட்டால் மிகப்பெரும் புரட்சி ஏற்பட முடியும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மவ்லானா ஹகீம் நூருத்தீன் (ரலி) அவர்களின் சில சம்பவங்களை கூறியுள்ளார்கள். அந்த சம்பவங்களை படிக்கும் போது தலைவருக்கும் அவரது சேவகருக்கும் முர்ஷிதுக்கும் முரீதுக்கும் இடையேயான தொடர்பு மற்றும் அன்பின் காட்சி தென்படுகின்றது. அதில் பணிவு, எளிமையின் முன்மாதிரியும் காணப்படுகின்றது. மாசற்ற தூய்மை மற்றும் விசுவாசத்தின் முன்மாதிரியும் தென்படுகின்றது. ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் தியாகத்தின் தரம் மற்றும் உயரிய கட்டுப்படுதல் பற்றி குறிப்பிட்டவாறு ஓரிடத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள்:

ஒருமுறை அன்னார் காதியான் வந்த போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: எனக்கு உங்களைப் பற்றி இல்ஹாம் வந்துள்ளது. நீங்கள் உங்கள் ஊருக்கு திரும்பினால் உங்கள் கண்ணியத்தை இழக்க நேரிடும். அதிலிருந்து அன்னார் தமது ஊரின் பெயரை உச்சரிப்பதையே விட்டுவிட்டார்கள். அப்போது அன்னார் தனது ஊராகிய பேராவில் அழகு வாய்ந்த ஓர் வீடு கட்டிக் கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் பேராவிற்கு சென்ற போது அதனை நானும் பார்த்தேன். அன்னார் அமர்ந்து தர்ஸ் கொடுப்பதற்காகவும் சிகிச்சை செய்வதற்கு அலுவலகம் அமைப்பதற்காகவும் ஓர் அழகு வாய்ந்த ஹால் ஒன்று உருவாக்கியிருந்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அந்த காலத்தைப் பற்றி கூறுகிறார்கள்: இப்போது அந்த கட்டிடம் ஒன்றும் பெரிய சிறப்பு வாய்ந்ததல்ல. எனினும் ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் தியாகம் செய்த அக்காலத்தில் ஜமாஅத்திடம் அதிகமாக பொருள் இருந்ததில்லை. அது போன்ற கட்டடத்தை ஒவ்வொருவரும் உருவாக்கவும் இயலாது. ஆனால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய வழிகாட்டலுக்குப் பிறகு அன்னார் அவ்விடத்தை திரும்பி சென்று காணக்கூட இல்லை. சில நண்பர்கள் சென்று அந்த இடத்தை பார்த்து விட்டாவது வாருங்கள் என்று கூறவும் செய்தார்கள். ஆனால் அன்னார் அதை நான் இறைவனுக்காக விட்டு விட்டேன். அதனை சென்று பார்க்க வேண்டிய அவசியம் என்ன ? என்று கூறி விட்டடார்கள்.

பிறகு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஒரு சம்பவம் கூறுகிறார்கள்: அஞ்சுமனுடைய சில பொறுப்பாளர்கள் தம்மை எல்லாம் தெரிந்தவர்களாக கருதத் தலைப்பட்டனர். உலகாதாயத்தின் சாயல் அவர்களிடம் மிகைத்தது. அஞ்சுமன் எடுத்து வைத்த பல விவகாரங்களில் ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் மற்றும் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் கருத்துகள் ஒன்றுபட்டு இருந்தன. மற்ற சில மூத்த உறுப்பினர்களின் கருத்துக்கள் வேறுபட்டதாக இருந்தன. எவ்வாறிருப்பினும் அதுபோன்ற ஒரு சந்தர்ப்பதில் தஃலீமுல் இஸ்லாம் ஸ்கூலை மூடிவிடுவது குறித்து ஒரு கருத்து எடுத்து வைக்கப்பட்டது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அதனை மூடுவதை எதிர்த்தார்கள். ஹஸ்ருத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹுடைய கருத்தும் அதனை மூடக்கூடாது என்பதாகவே இருந்தது. இறுதியில் தீர்மானம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் எடுத்து வைக்கப்பட இருந்தது.

ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் மரியாதை நிமித்தமாக பேச முடியாதவர்களாக இருந்தார்கள். எனவே அன்னார் என்னை தனது ஆயுதமாகவும், ஊடகமாகவும் ஆக்கியிருந்தார்கள். என்னிடம் அன்னார் கூறுவதை நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் கொண்டு செல்வேன். இறுதியில் இறைவன் எங்களுக்கு வெற்றியை நல்கினான்.

ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுடைய தொலை நோக்குப் பார்வை மற்றும் அன்னாரது ஈமான் குறித்து குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள். சமுதாயங்கள் எவ்வாறு உருவாகின்றன என்று கூறுகின்றார்கள். தனி நபர்களால் சமுதாயங்கள் உருவாகின்றன. சமுதாயங்களால் தனி நபர்கள் உருவாகின்றனர். உயரிய நுட்ப அறிவுக் கூர்மையுள்ள மனிதர்கள் சமுதாயத்துக்கு அதிக பயன் தருகின்றனர். நல்ல உயர் நோக்கங்கள் உடையவர்கள் நல்ல மனிதர்களின் கைக்குள் வரும் போது நல்ல பயனைத் தருபவர்களாக ஆகின்றனர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் ஒரு ஜமாஅத்தை உருவாக்கினார்கள். அன்னாருடன் இறைவன் இவ்வாறே நடந்து கொண்டான். அன்னாரின் வாதத்தின் தொடக்கத்திலேயே அன்னார் மீது சிலர் ஈமான் கொண்டார்கள். அம்மக்களது சுய சிறப்புகளின் காரணத்தால் மிகச் சிறந்த சேவை செய்பவர்களாகவும் இருந்தனர். அல்லாஹ் அவர்களிடம் ஒப்படைத்திருந்த அன்னாரது பணியில் அவர்களுக்கு உதவி செய்பவர்களாகவும் இருந்தனர். அவர்களுள் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களும் ஒருவராவர்.

ஒருவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது தப்பெண்ணம் கொண்டார். நுபுவ்வத் தொடர்கிறது என்பது குறித்து அந்த நூலில் அவர் படித்த போது அம்மனிதர் கண்டிப்பாக மவ்லவி நூருத்தீன் சாஹிப் மிர்ஸா சாஹிபை அவர்களை விட்டு பிரிந்து விடுவார்கள் என்று கூறினார். அம்மனிதர் சில பேரை ஒன்று சேர்த்து மெதுவாக மெதுவாக ஹஸ்ரத் மவ்லவி சாஹிபிடம் சென்றார். அன்னாரிடம் போய் ஒரு மனிதர் இக்காலத்தில் நான் நபியாக ஆக்கி அனுப்பப்பட்டுள்ளேன். ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுக்குப் பிறகும் முஹம்மதிய்ய உம்மத்தில் நுபுவ்வத் தொடர்கிறது என்கிறார் எனில் அம்மனிதரைக் குறித்து நீங்கள் என்ன நினைப்பீர்கள் ? என்று அம்மனிதர் கேட்டார். முதலாவது கலீஃபா கூறினார்கள்: இந்த கேள்விக்கான பதில், வாதம் செய்பவரை பொருத்தது. வாதம் செய்பவர் அதற்கு தகுதியானவரா ? இல்லையா ? என்பதைப் பொருத்தது. வாதம் செய்பவர் நம்பத்தகுந்தவர் இல்லையெனில் நாம் அவரை பொய்யர் என்போம். வாதம் செய்பவர் நம்பத்தகுந்தவர் இறையச்சமுடையவர் எனில் தவறு என்னுடையது. உண்மையில் நபி வர முடியும் எனறு கருதுவேன்.

ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் சகோதரி பீர் சாஹிபின் சிஷ்யையாக இருந்தார்கள். அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்து விட்டார்கள். பைஅத் செய்த பிறகு அப்பெண் திரும்பி சென்ற போது பீர் சாஹிப் கூறினார். உனக்கு என்ன ஆயிற்று மிர்ஸா சாஹிபிடம் பைஅத் செய்து விட்டாய் ? நூருத்தீன் உன்னை வசியம் செய்து விட்டார் என்று தெரிகிறது என்றார். நான் மிர்ஸா சாஹிபை ஏற்கக் காரணம் அவரை நான் ஏற்காவிட்டால் மறுமை நாளில் செருப்படி பட வேண்டியிருக்கும். நீங்கள் அந்நாளில் என்ன செய்வீர்கள் ? என்று கூறுங்கள் கூறுங்கள் என்று கூறினார்கள். அந்த பீர் சாஹிப் கூறினார். இது நூருத்தீனின் வேலை என்று தெரிகிறது. அவர் தான் உங்களுக்கு இதனை சொல்லி என்னிடம் அனுப்பியிருக்கிறார். உனக்கு அந்த பயம் எல்லாம் வேண்டாம். மறுமை நாள் வந்து, எல்லாரும் சிராத் பாலத்தில் ஒன்று கூடும் போது உனது பாவத்தை நான் எடுத்துக் கொள்வேன். நீ ஓடியவாறு சொர்கக்கத்திற்கு போய் விடுவாய். அப்பெண் கேட்டார். பீர் சாஹிப், நான் சொர்க்கத்திற்கு போய் விட்டால் பிறகு நீங்கள் என்ன செய்வீர்கள். கூறினார். மலக்குகள் என்னிடம் வருவார்கள். நான் சிவந்த கண்களுடன் அவர்களிடம், எங்கள் நானா ஹஸ்ரத் இமாம் ஹுஸைனுடைய ஷஹாதத் போதுமானதில்லையா? இந்த மறுமை நாள் மீது எங்களுக்கும் தண்டனை தரப்படுகிறது என்று கேட்பேன். உடனே அம்மலக்கு வெட்கப்பட்டு ஓடி விடுவார். பிறகு நாங்களும் துள்ளிக் குதித்து சொர்க்கத்திற்குள் ஓடிவிடுவோம்.

ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹுடைய எளிமை குறித்து குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: நாம் சுயமே ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களை பார்த்துள்ளோம். அன்னார் சபையில் மிகவும் அமைதியுடன் அமர்ந்திருப்பார்கள். ஒரு முறை சபையில் திருமணம் தொடர்பாக பேச்சு நடந்து கொண்டிருந்தது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: மவ்லவி சாஹிப் ஜமாஅத் வளர்வதற்கு ஒரு வழி சந்ததிகளை பெருக்குவதாகும். எனவே ஜமாஅத் நண்பர்கள் ஒன்றுக்கு அதிகமாக திருமணம் செய்ய வேண்டும். அதனாலும் ஜமாஅத் வளர முடியும். ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் முட்டில் இருந்து தலையை உயர்த்தியவாறு கூறினார்கள். ஹுஸூர் நான் உங்கள் கட்டளையை ஏற்கத் தயார். ஆனால் இந்த வயதில் எனக்கு தனது மகளை தர எவரும் தயாராக இருக்க மாட்டார். அப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் சிரித்தார்கள். பாருங்கள் ! ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி)

அவர்கள் கூறுகிறார்கள். பாருங்கள் ! இந்த கண்ணியம், எளிமை காரணத்தால் தான் அன்னாருக்கு இந்த பதவி கிடைத்தது. அல்லாஹ் அவர்களின் தகுதிகளை உயர்த்துவானாக என்றே கூறுகிறோம். ஏனெனில் அன்னார் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை எந்த காலத்தில் ஏற்றுக் கொண்டார்கள் எனில் முழு உலகமும் அன்னாரை எதிர்த்துக் கொண்டிருந்தது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் எங்களது திருமணம் சந்தபந்தமாக பேச்சு வரும் போது இன்ன சாஹிபிற்கு எத்தனை குழந்தைகள் ? எத்தனை சகோதரர்கள் ? அவர்களுக்கு எத்தனை குழந்தைகள் ? என்பதை விசாரிப்பார்கள். முஸ்லிஹ் மவ்வூது கூறினார்கள்: என்னிடம் ஆலோசனை கேட்பவர்கு நான் அவர்களுக்கு இந்த ஆலோசனையையே வழங்குகின்றேன். எங்கு சம்பந்தம் பேசுகிறீர்களோ அங்கு எத்தனை குழந்தைகள் உள்ளன ? என்பதை விசாரிக்க வேண்டும். இக்காலத்தில் Family Planing ற்கு அதிகமும் அழுத்தம் தரப்படுகின்றது. இதற்கு மிகவும் அழுத்தம் தருகிற நாடுகளில் கூட இப்போது இது தவறு என்ற ஓர் உணர்வு தட்ட ஆரம்பித்துள்ளது. மனிதன் இயற்கை சட்டத்துடன் மோத முயற்சிக்கும் போது பிரச்சனைகள் எழுகின்றன. எவ்வாறிருப்பினும், இது தொடர்பான கருத்துக்கள் இடையில் வந்தன.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹுடைய மாசற்ற தூய்மை, எளிமை பணிபு ஆகியவற்றுக்கு இன்னொரு சம்பவத்தை கூறுகிறார்கள்: சேவைக்கு பல்வேறு வழி வகைகள் உள்ளன. உணவு சமைக்க வேண்டிய தேவை உள்ளது. ஆரம்ப காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய காலத்தில் உணவு சமைக்க வேண்டிய தேவை இருந்தது. சாமான் வாங்கி வர வேண்டிய தேவை இருந்தது. இந்த பணிகளை குடும்ப உறுப்பினர்கள் மட்டுமே செய்ய முடியாது என்பது வெளிப்படை. பெரும்பாலான நேரங்களில் ஜமாஅத் நபர்களும் சேர்ந்து பணி செய்ய வேண்டியிருந்தது. அப்போது முறைப்படியாக விருந்தோம்பலுக்கான ஓர் அமைப்பு இருக்கவில்லை. விறகுகளை வாங்கி அடுக்க வேண்டியிருந்தது. வீட்டின் பணிப்பெண், விறகு வந்துள்ளது. யாராவது வாங்கி அதனை உள்ளே எடுத்து வாருங்கள் என்று குரல் எழுப்புவார்கள். நெருப்பு எரிக்கும் சாதனங்கள் வந்துள்ளன என்று குரல் எழுப்புவர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஒரு முறை லங்கர் கானாவுக்காக சமையலுக்காக எரிபொருள் வந்தது. மேகமும் வந்தது. பணிப்பெண் வந்து அதனை உள்ளே எடுத்து வருமாறு குரல் எழுப்பினாள். அவளது குரலை எவரும் கவனிக்கவில்லை. பணிப்பெண்ணின் அழைப்பை யாரும் கவனிக்கவில்லை என்பதை கண்ட போது அன்னார் (முதல் கலீஃபா) கூறினார்கள். நல்லது இன்று நாமே அம்மனிதர் ஆகி விடுவோம் என்று கூறியவாறு விறகை எடுத்து உள்ளே போடத் தொடங்கினார்கள்.

ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீதிருந்த அன்பிற்கு ஓர் உதாரணம் தந்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுடைய வழக்கமானது அவர்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் இருக்கும போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது அன்பை வெளிப்படுத்தும் போது மிர்ஸா என்ற சொல்லை பயன்படுத்துவார்கள். எமது மிர்ஸா என்று கூறுவார்கள். ஆரம்ப காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வாதம் செய்திருக்கவில்லை. அப்போதே அன்னாருக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் தொடர்பு இருந்தது. எனவே இந்த சொல் அவர்கள் நாக்கில் ஏறி இருந்தது. பிறகு இரு பக்கமும் இருந்த அன்பு, மாசற்ற தூய்மையின் ஒரு உதாரணம். ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு எந்த அளவு தூய பற்று இருந்ததோ அது எவருக்கும் மறைவானதல்ல.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அன்னாருக்கு விரைவாக நடக்கும் வழக்கம் இருந்ததில்லை. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நடக்கச் செல்லும் போது முதல் கலீஃபத்துல் மஸீஹும் உடன் இருப்பார்கள். ஆனால் சிறிது தூரம் சென்றதும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வேகமாக நடக்கத் தொடங்கியதும் அமர்ந்து விடுவார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் திரும்பி வரும் போது அவர்களுடன் சேர்ந்து கொள்வார்கள்.

அதற்கு பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எப்போதும் நடக்கும் போது அன்னாரையும் உடன் அழைத்து செல்வார்கள். அன்னார் வேகமாக நடந்து ஹஸ்ரத் முதல் கலீஃபா பின் தங்கிவிட்டால் அன்னார் நடந்தவாறே ஓரிடத்தில் நின்று, மவ்லவி சாஹிப் இந்த விஷயம் எப்படி என்பார்கள். மவ்லவி சாஹிப் ஓடி வந்து இணைந்து நடப்பார்கள். பிறகு சிறிது நேரத்திற்குப் பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வேகமாக நடப்பார்கள். சிறிது தூரம் சென்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நிற்பார்கள். மவ்லவி சாஹிப் இன்ன விஷயம் இவ்வாறு ஆகும் என்பார்கள். மவ்லவி சாஹிப் பிறகு வேகமாக வந்து இணைந்து கொள்வார்கள். ஆனால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் சென்று 30 – 40 அடி நடந்தும் மவ்லவி சாஹிப் பின்தங்கிவிடுவார்கள். பிறகு ஏதாவது ஒரு விஷயத்தைக் கூறி மவ்லவி சாஹிபை அழைப்பார்கள். அன்னார் வேகமாக சென்று இணைந்து கொள்வார்கள். ஹஸ்ரத் மவ்லவி சாஹிப் வேகமாக நடக்கும் வழக்கத்தை உருவாக்க வேண்டும் என்பது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு செய்வதன் நோக்கமாக இருந்தது.

பிறகு இன்னொரு ஓர் உதாரணம். இதன் மூலம் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுடைய மாசற்ற தூய்மை மற்றும் தவக்குல் வெளிப்படுகிறது. முஸ்லிஹ் மவ்வூது கூறுகிறார்கள்: ஹஸ்ரத் மீர் சாஹிப் கடும் நோயுற்று இருந்தார்கள். சிறுநீரகத்தில் எத்தகைய கடுமையான பாதிப்பு என்றால் டாக்டர்கள் ஆபரேஷன் செய்ய வேண்டும் என்று கூறியிருந்தார்கள். சில யுனானி மருந்துகளால் ஆபரேஷன் இல்லாமலேகூட குணம் கிடைத்துவிடும் என்று சிலர் கூறினார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு தந்தி கொடுத்தார்கள். எந்த

நிலையில் இருக்கின்றீர்களோ அப்படியே வாருங்கள். அன்னார் மருந்தகத்தில் அமர்ந்திருந்தார்கள். கோட் அணிந்திருக்கவில்லை. பணமும் கையில் இருக்கவில்லை. அநேகமாக ஹக்கீம் குலாம் முஹம்மது சாஹிப் மர்ஹூம் துனைக்கு அழைத்துக் கொண்டு அவ்வாறே எழுந்து நடக்க தொடங்கினார்கள். முதல் கலீஃபா நடப்பதில் பலஹீனமானவர்கள் என்பது எல்லாருக்கும் தெரியும். அன்னார் நடந்தே பட்டாலா சென்றடைந்து ஸ்டேஷனில் வந்து உட்கார்ந்தார்கள். நடப்பதில் பலஹீனமானவர்களாக இருந்தாலும் உடனே வந்து சேருமாறு கட்டளை வந்ததால் நடந்தே பட்டாலா வந்து சேர்ந்தார்கள்.

பாருங்கள். இதுதான் மாசற்ற பற்றும், கட்டுப்படுதலும். வேகமாக நடப்பதில் அன்னாருக்கு சிரமம் இருந்தது. ஆனால் கட்டளை வந்ததும் பட்டாலா வரை சுமார் 11 மைல் தூரம் நடந்தே சென்று சேர்ந்தார்கள். ஹகீம் சாஹிப் போக்கு வரவு செலவுக்கு என்ன செய்வது என்று கேட்டார்கள். முதல் கலீஃபா கூறினார்கள். இங்கு அமருங்கள். அல்லாஹ் தஆலா தானே ஏற்பாட்டை செய்வான். இது அன்னாரின் தவக்குல் – பொறுப்புச் சாட்டுதலுக்கு ஓர் உதாரணம் ஆகும். இந்நிலையில் ஒருவர் வந்து நீங்கள் ஹகீம் நூருத்தீன் சாஹிப் அவர்களா ? என்று கேட்டார். அன்னார் ஆம் என்றார்கள். அன்னார் கூறினார்கள். இரயில் வர 10 – 15 நிமிடம் இருக்கிறது. நான் ஸ்டேஷன் மாஸ்டரிடம் உங்களை எதிர்பார்க்குமாறு சொல்லியும் இருக்கிறேன். நான் பட்டாலாவின் தாசில்தார் ஆவேன். எனது மனைவி கடும் நோயுற்று இருக்கிறாள். நீங்கள் வந்து சற்று பார்க்க வேண்டும். அன்னார் நோயாளிப் பெண்ணைப் பார்த்து மருந்து எழுதிக் கொடுத்து விட்டு ஸ்டேஷனுக்கு திரும்பி வந்தார்கள். அந்த தாசில்தாரும் உடன் வந்தார். நீங்கள் வண்டியில் ஏறி உட்காருங்கள். நான் டிக்கெட் வாங்கி வருகிறேன் என்றார். அவர் 50 ரூபாய் தொகையும் தந்து இது எனது அன்பளிப்பு. ஏற்றுக் கொள்ளுங்கள் என்றார். அன்னார் டெல்லி வந்து மீர் சாஹிபிற்கு சிகிச்சை செய்தார்கள். மீர் நாஸிர் நவாப் சாஹிபிற்கு சிகிச்சை செய்தார்கள்.

முஸ்லிஹ் மவ்வூது கூறுகிறார்கள்: இதுவே சரியான தவக்கலுக்குரிய இடமாகும். எவருக்கு அல்லாஹ்வின் மீது தவக்குல் இருக்குமோ அவர் எவரிடமும் செல்வதில்லை. அல்லாஹ்வே எவரையாவது அனுப்பி அவருக்கு உதவி செய்கிறான். இது தவக்குலின் ஓர் உயரிய நிலையாகும். அது அன்னாருக்கு கிடைத்திருந்தது.

முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள். எனக்கு நினைவுண்டு. ஒரு முறை ஒரு நோயாளி வந்தார். அவர் கூறினார். மவ்லவி சாஹிபிடம் நான் சிகிச்சை பெற்றேன். அதனால் எனக்கு நல்ல பலன் கிடைத்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அப்போது நோயுற்று இருந்தார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அதனைக் கேட்டதும் எழுந்து அமர்ந்தார்கள். ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களிடம் கூறினார்கள். அல்லாஹ் தஆலா தான் மவ்லவி சாஹிபிடம் ஒரு தூண்டுதலைப் போட்டு இங்கு கொண்டு வந்துள்ளான். இப்போது ஆயிரக்கனக்கானோர் அன்னாரிடம் இருந்து பயன் பெறுகிறார்கள். மவ்லவி சாஹிப் இங்கு வரவில்லை எனில் எவ்வாறு மக்களுக்கு சிகிச்சை கிடைத்திருக்கும். ஆகவே மவ்லவி சாஹிபின் இருப்பது இறைவனது மிகப்பெரும் கருணையாகும் என்றார்கள். ஆக, இது ஒரு நன்றியுடைமையாகும். ஆனால் இதில் மிகைப்படுத்துதல் இல்லை.

ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுடைய பணிவும் அளவு கடந்ததாக இருந்தது. அதனைப்பற்றி ஒரு சஹாபியை சான்று காட்டி ஹஸ்ரத் முஸ்லிஹ மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். அந்த சஹாபி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை சந்திக்க வந்திருந்தார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மஸ்ஜிது முபாரக்கில் அமர்ந்திருந்தார்கள். வாசலில் காலணிகள் கிடந்தன. சாதாரண உடை அணிந்த ஒரு மனிதர் வந்து செருப்புகளின் மீது அமர்ந்து விட்டார். இந்த சஹாபி கூறினார். இம்மனிதர் செருப்புகளை திருடுகிறவர் போலும் என்று நான் கருதிக் கொண்டேன். காலணிகளை எடுத்துக் கொண்டு ஓடிவிடக் கூடாதே என்று நான் எனது காலணிகளை கண்காணித்துக் கொண்டேன். கூறுகிறார். சில காலத்துக்குப் பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வஃபாத் ஆகிவிட்டார்கள். அன்னாரின் இடத்தில் இன்னொருவர் கலீஃபாவாக ஆகிவிட்டார் என்று கேள்விப்பட்டேன். அவரிடம் பைஅத் செய்ய வந்தேன். நான் பைஅத்துக்காக கையை நீட்டிய போது நான் என்ன பார்க்கின்றேன் என்றால் நான் முட்டாள்தனமாக யாரை செருப்புத் திருடன் என்று கருதியிருந்தேனோ அவர் தான். அதாவது முதல் கலீஃபத்துல் மஸிஹ். நான் மிகவும் வெட்கமடைந்தேன்.

அல்லாஹ் அன்னாரின் தகுதியை உயர்த்துவானாக. அன்னாரின் பெயரால் குழப்பத்தை ஏற்படுத்துபவர்களுக்கும் அறிவை வழங்குவானாக. நம்மையும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய விருப்பத்திற்கு ஏற்ப இந்த முன்மாதிரியில் இருந்து பாடம் கற்கும் வாய்ப்புத் தருவானாக.

இன்று மொரிஷியஸுடைய ஆண்டு மாநாடு நடக்கிறது. மொரிஷியஸில் அஹ்மதிய்யா ஜமாஅத் நிலைநாட்டப்பட்டு ஒரு நூற்றாண்டு காலம் ஆகிவிட்டது. அல்லாஹ் தஆலா அவர்களது மாநாட்டை அருளுக்குரியதாக ஆக்குவானாக. இந்த நூற்றாண்டு அங்கு இனி புதிய ஆண்டின் முன்னேற்றத்தை வழங்கக் கூடியதாக இருக்கட்டுமாக. புதிய புதிய திட்டங்கள் உருவாகட்டும். சில குழப்பவாதிகளும் உள்ளனர். அவர்களிடமிருந்தும் ஜமாஅத்தை பாதுகாப்பானாக. எல்லா வகையிலும் மாநாட்டையும், மாநாட்டின் நிகழ்ச்சிகளையும் அருளுக்குரியதாக ஆக்குவானாக.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh,London – on 13.11.2015
Tamil Translation : Moulavi. M. Nizamuddin Sb
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516